DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 5

| | |
|---|---|
| Name | : ராஜ்குமார் |
| Father's Name | : ராமசாமி |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 16th day of July, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, சென்னை கோயம்பேடு, தெற்கு மாடவீதி, கதவு எண்.17/38 ல் வசித்து வருகிறேன். நான் முகப்பேறிலுள்ள Tata Capital லில் Collection Staff ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 28.04.2024 அன்று இரவு 8.40 முதல் 9.00 மணியளவில் நான் தெற்கு மாடவீதியிலுள்ள எனது கடையிலிருந்து கோயம்பேடு காய்கறி அங்காடிக்கு மளிகை சாமான் வாங்க சென்றேன். அப்போது, சேமாத்தம்மன் நகர், 3 வது செக்டரில் ஒரே கூட்டமாக இருந்தது. நானும், எனக்கு தெரிந்து ஆறுமுகம் என்பவரும் என்ன கூட்டம் என்றுபோய்

பார்த்தோம், அங்கு K11 கோயம்பேடு போலீசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள். அங்கு மாதிரி வரைபடம் வரைந்தார்கள். எங்களிடம் சாட்சிகளாக இருக்க கேட்டுக் கொண்டார்கள், நாங்களும் ஒப்புக் கொண்டோம். சம்பவ இடத்தை காட்டி அது குறித்து ஒரு மகசர் தயாரித்தார்கள், அதில் நானும், ஆறுமுகமும் கையொப்பமிட்டோம், பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது, 1வது கையொப்பம் ஆறுமுகத்துடையது. அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. இது சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**</u>

28.04.2024 அன்று 8.40 முதல் 9.00 மணிவரை நான் சம்பவ இடத்திலிருந்தேன். நான் மளிகை சாமான்கள் வாங்குவதற்காக அந்த பக்கம் சென்றேன். தியா பாஸ்ட்புட் என்ற பெயரில் நானும், எனது நண்பரும் கடை வைத்து நடத்தி வருகிறோம். அந்த கடை தெற்கு மாடவீதியிலுள்ளது. என் கடையிலிருந்து சம்பவ இடம் 400 மீட்டர் தொலைவிலுள்ளது. இறந்து போன நபரை நான் பார்த்துள்ளேன், அவரிடம் பேசியதில்லை, அவர் பெயர் எனக்கு தெரியாது. எதிரியையும் நான் பார்த்துள்ளேன், பேசியதில்லை, அவர் பெயரும் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் ஒரு பேட்ரோல் வண்டியும் நான்கு போலீசாரும் இருந்தார்கள். போலீசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் அங்குசென்றேன். என்னிடம் விவரம் கூறினார்கள். பிறகுதான் என்னை சாட்சியாக இருக்க கேட்டார்கள். உதவி ஆய்வாளர்தான் என்னிடம் விவரம் கூறினார். அவர் பெயர் எனக்கு தெரியாது. நான் செல்வதற்கு முன்பே அங்கு கூட்டம் இருந்தது. பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்துதான்

எழுதப்பட்டது. சம்பவத்தை நான் நேரடியாக நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை சாட்சியாக இருக்க கேட்டார்கள், நான் ஒப்புக் கொண்டேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தின் கதவு எண் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** – இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**<u>SC.No.50/2025</u>**

<u>PROSECUTION WITNESS No. 6</u>

| | |
|---|---|
| Name | : நாகராஜன் |
| Father's Name | : வரதன். |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 16th day of July, 2025.

---

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது, சென்னை கோயம்பேடு, K11–CMBT காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நிலைய குற்ற எண். 161/2024 வழக்கில் இறந்து போன மைக்கேல் துரைபாண்டி, என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை 29.04.2024 அன்று நான் பெற்று, காலை 10.00 மணியளவில் மருத்துவரிடம் ஒப்படைத்தேன். இறந்தவரின் உடலை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்ய உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு, மாலை 4 மணியளவில் இறந்தவரின்

உடலை அவரது அண்ணன் மகன் ஞானசேகரன் வசம் ஒப்படைத்தேன். மறுநாள், 30.04.2024 அன்று காலை 10.00 மணியளவில் இறந்தவரின் உடலிலிருந்து எடுத்து பாதுகாக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பின்பு, நிலையம் ஆஜராகி அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

காலை 9.30 மணியளவில் பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் என்னிடம் கொடுக்கப்பட்டது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் ஒப்படைத்தேன், மறுநாள் தடய அறிவியல் ஆய்வகத்தில் உள்ளுறுப்புகளை ஒப்படைத்தேன் என்றாலும் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |